2021 பிப்ரவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தொகுதி, பைத்தூர் ஊராட்சி என்பது முற்றிலும் மலைவாழ் மக்கள் நிறைந்த பகுதியாகும். இந்தப் பகுதியில் 7,500 பேர் வசித்து வருகின்றனர். அதில், சுமார் 5,000 பேர் tribal இனத்தைச் சார்ந்தவர்களாவர். இதே ஊராட்சியில் தனியாக, புதிதாக கூட்டுறவுச் சங்கங்கள் இல்லை. எனவே, அருகில் இருக்கக்கூடிய புங்கவாடி ஊராட்சியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், 25 கிலோ மீட்டர் தூரம் பயணித்து, பொருட்களை வாங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, இந்தக் கோரிக்கையையும் துறைக்கு அனுப்பி, எங்களது இரண்டு ஊராட்சிகளுக்கும் புதிதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு அமருகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கைகள் அனைத்தும் துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

42—

மின்மாற்றி

***37577—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, 184–வது வட்டம், கந்தன்சாவடி, கோவிந்தசாமி நகர் 4–வது மற்றும் 5–வது தெருக்களின் சந்திப்புப் பகுதியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண கிராமத்தில் பிறந்த என்னை, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக்கி, அமைச்சராக்கி, 15–வது சட்டமன்றப் பேரவையின் கடைசிக் கூட்டத் தொடரில் மின் துறையின் கடைசி கேள்விக்குப் பதில் அளிக்கும் வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் நம்மை ஆளாக்கிய நம் தாய் நம்மிடம் இல்லை என்றாலும்கூட, தாயினுடைய ஆட்சியை, (மேசையைத் தட்டும் ஒலி) தாயினுடைய வாரிசாக இருந்து, சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்தச் சட்டமன்றத்திற்கு வருவதற்கு உறுதுணையாக இருந்த மரியாதைக்குரிய தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

இன்றையதினம் இந்தக் கேள்வி நேரத்தில் பதில் அளிப்பதற்கு உறுதுணையாக இருக்கிற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பத்து ஆண்டுக்காலம் நமது சட்டப் பேரவையைச் சிறப்பாக வழிநடத்தி, உறுப்பினர்கள் பேச வாய்ப்பு கேட்கும்போதெல்லாம் கோபப்படாமல், கஷ்டமான சூழ்நிலையிலும் அவையை சிறப்பாக வழிநடத்தி, மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி மரியாதைக்குரிய

2021 பிப்ரவரி 27]

அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில் அமைய வேண்டும் என்ற வகையில், அவையை சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம் தாய் இன்றையதினம் நம்மிடத்தில் இல்லை; ஆனால், தாய் கொடுத்த பதவி நம்மிடத்தில் இருக்கிறது. தாய் எனக்கு ஆறாண்டு காலம் அமைச்சராகப் பணியாற்ற வாய்ப்பு கொடுத்திருந்தார்கள். தாயினுடைய வழியில் வந்த அண்ணன் எடப்பாடியார் அவர்கள், அமைச்சராக நான்கு ஆண்டு காலம் நான் சிறப்பாகப் பணிபுரிவதற்கு அனுமதி வழங்கி, தமிழகத்தில் நல்லாட்சியைக் கொடுத்திருக்கிறார்கள். 15–வது சட்டமன்றப் பேரவையின் இறுதி நாளான இன்று கேள்விக்குப் பதில் அளிக்கும் வாய்ப்பினை வழங்கிய அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்து, மற்றுமுள்ள அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது சோழிங்கநல்லூர் தொகுதியில் மின்மாற்றி வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை துறையின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக மரபோடு இந்தச் சபையை நடத்தி வரும் உங்கள் பாதம் பணிந்து என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்குக் கண் கொடுத்தவர் காமராஜர்; இருந்தாலும், கல்விக்கு உயிர் கொடுத்த, சத்துணவு தந்த சரித்திர நாயகன், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். "மக்களால்

நான்; மக்களுக்காகவே நான்" என்று ஏழைகளுக்காக வாழ்ந்து மறைந்த, கல்விக்கு இதயத்தையே கொடுத்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், காவேரிக் காப்பாளன், விவசாயிகளின் விடிவெள்ளி அவர்கள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற விவசாயிகளின் அனைத்துப் பயிர்க் கடன்களும் தள்ளுபடி என்று அறிவித்திருக்கிறார்கள். கூட்டுறவு நிறுவனங்களில் 6 பவுன் வரையிலான நகைக் கடன் தள்ளுபடி, அதேபோன்று, இன்றைக்கு தமிழகத்தில் 2 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களில், 39 இலட்சம் பேர் இடம்பெற்றிருக்கிறார்கள். அந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கிய கடன் தள்ளுபடி ஏழைகளின் வங்கிக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்து, அவர்களை வாழவைத்த தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கின்றார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை 'இதய தெய்வம்' என்று சொன்னோம்; புரட்சித் தலைவி அம்மா அவர்களை 'இதய தெய்வம்' என்று சொன்னோம். அந்த வரிசையில், இன்றைக்கு மூன்றாவது இதய தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற எங்கள் 'இதய தெய்வம்' மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.

அதேபோன்று, ஜல்லிக்கட்டு நாயகன், தென்பாண்டிச் சிங்கம், மனிதநேயப் பண்பாளர் அண்ணன் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். இந்தச் சபையின் மூத்த உறுப்பினரும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரும், எங்கள் அரசியல் வழிகாட்டியுமான அண்ணன் கே.ஏ.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். எங்களது மாவட்டத்தினுடைய அமைச்சர், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.சி. கருப்பணன் அவர்களையும் வணங்குகிறேன். எங்களது மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அண்ணன் கே.வி.ஆர். அவர்களையும் வணங்குகிறேன். சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களையும், அரசு தலைமைக் கொறடா அவர்களையும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

ஈரோடு கிழக்குத் தொகுதியில் 100 கோடி ரூபாய் செலவில் மின் புதைவடக் கம்பிகள் அமைக்கும் பணிகளில் 40 சதவிகிதப்